**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No.26/2024**

**வா.சா.1 – கிருஷ்ணவேணி 17.06.2025**

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

வா.சா.ஆ.2 கிரைய பத்திரம் எனது அப்பா மற்றும் அம்மா பெயரிலுள்ள கிரைய பத்திரம் ஆகும். எனது அப்பாவிற்கு பூர்வீகம் குன்னத்தூர் ஆகும். குன்னத்தூர் எந்த தாலுகா என்று எனக்கு தெரியாது மதுரை மாவட்டம் ஆகும். எனது அப்பா இந்திரய ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் ஆவார். தாவா சொத்தை கிரையம் வாங்கும் போது நான் இளவர் ஆவேன். நான் 1992ம் வருடம் பிறந்தேன்.கீழடியில் உள்ள சொத்தை விற்று தாவா சொத்தை எனது அப்பாவும் அம்மாவும் கிரையம் வாங்கினார்கள். கீழடி திருப்புவனம் தாலுகா சிவகங்கை மாவட்டத்தில் உள்ளது.கீழடியில் உள்ள சொத்தை எனது அம்மாவின் உறவினரான தங்கம் என்பவருக்கு விற்பனை செய்தார்கள். அந்த சொத்து வீடு ஆகும். அந்த வீட்டிற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து பூர்வீக சொத்தை விற்பனை செய்த தொகையில் வாங்கவில்லை என்றும் எனது அப்பா ராணுவத்தில் சம்பாதித்தது மூலமும் எனது அம்மா பால் விற்று சம்பாதித்ததன் மூலமும் தாவா சொத்து வாங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு 2010ம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு எனது பெற்றோர் 20 பவுன் தங்க நகையும் ரூ.500000- சீர் வரிசையும் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. எனக்கு நகையும் போடவில்லை சீர்வரிசையும் செய்யவில்லை. எனக்கு திருமணத்தின்போது ரூ.400000- ரொக்கமாக கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. 2013 முதல் நான் சென்னையில் தான் வசித்து

வருகிறேன். தாவா சொத்தில் உள்ள வீட்டில் எனது அப்பாவும் அம்மாவும் வசித்து வந்தார்கள் எனது அப்பா 2010ல் இறந்துவிட்டார். தற்போது எனது அக்கா 2ம் பிரதிவாதி திருவேணி அந்த வீட்டில் வசித்து வருகிறார். எனக்கும் 2ம் வாதிக்கும் திருமணத்தின் போது அனைத்து சீர்வரிசைகளும் நகைகளும் நன்றாக செய்துவிட்டதால் அதன் மூலம் நானும் 2ம் வாதியும் வசதியாக வசித்து வருவதாலும் 2ம் பிரதிவாதி கஷ்டப்பட்டு வருவதாலும் எனது அப்பா 2ம் பிரதிவாதியின் மகனுக்கு தாவா சொத்துக்களை உயில் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது அக்கா 2ம் பிரதிவாதியின் மகன் விஷ்ணுதரன் தான் எனது அப்பாவிற்கு இறுதி சடங்கு செய்தார் என்றால் சரியல்ல எனது தங்கை 2ம் வாதி தான் இறுதி சடங்கை செய்தார். எனது அப்பா உயில் எழுதிய போதே எங்கள் அனைவருக்கும் தெரிந்துதான் உயில் எழுதினார் என்றும் 2ம் பிரதிவாதியின் மகன் தான் எனது அப்பாவிற்கு இறுதி சடங்கு செய்தார் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு முதல் மனைவி இருந்த விபரம் எனக்கு தெரியும். எனது அம்மால எனது அப்பாவிற்கு இரண்டாம் தாரம் ஆவார். எனது அப்பாவின் மூத்த தாரத்தின் பெயர் முனியம்மாள். முனியம்மாளுக்கு நவநீதகுமார், பாலகிருஷ்ணன் என்ற இரண்டு ஆண் மக்கள் உண்டு. நவநீதகுமாருக்கு தற்போது 40 வயதிற்கு மேல் இருக்கும். மேற்படி பாலகிருஷ்ணன் 2020ல் இறந்துவிட்டார். பாலகிருஷ்ணனுக்கு இரண்டு ஆண் மக்கள் உள்ளனர். மேற்படி நவநீதகுமாரையும் பாலகிருஷ்ணனின் வாரிசுகளையும் ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவர்களது பெயர் எனது அப்பாவின் வாரிசு சான்றில் இல்லை. மூத்த

தாரத்தின் பிள்ளைகளுக்கு சொத்துக்களை ஒதுக்கிவிட்டதை போல எங்களுக்கும் சொத்துக்களை எங்கள் அப்பா ஒதுக்கிவிட்டார் என்றால் சரியல்ல. எனது அம்மா 1ம் பிரதிவாதி விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் ஆவார். எனது தாயாரும் தகப்பனாரும் விவசாயத்தின் மூலமாகவும் வருமானம் ஈட்டினார்கள். தாவா சொத்துக்கள் எனது அப்பா மற்றும் அம்மாவின் சுயசம்பாத்தியத்தின் மூலம் கிரையம் பெறப்பட்ட சொத்துக்கள் என்பதாலும் தாவா சொத்துக்களை பொறுத்து எனது அப்பா 2ம் பிரதிவாதியின் மகனுக்கு உயில் எழுதி வைத்து விட்டதாலும் தாவா சொத்துக்களில் எங்களுக்கு எந்த பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் தாவா வழக்கை தாக்கல் செய்தபோது தாவா சொத்து 1 செண்டின் மதிப்பு ரூ.700000- ஆகும். தாவா சொத்தில் உள்ள வீட்டின் மதிப்பு சுமார் 2000000- ஆகும். தாவா சொத்தை எனக்கு திருமணமான பின்பு ஒரு போதும் நான் கூட்டாக அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை குறைத்து மதிப்பீடு செய்து நீதிமன்ற கட்டணம் செலுத்தியுள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. என் தாயாரை நான் தாக்கியதாக திருப்புவனம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் எனது தாயார் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. எனது கணவரின் உறவினர்கள் மூலம் எனது அம்மாவை மிரட்டி வீட்டை விட்டு வெளியேற்ற முயற்சி செய்து

வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை